வரை கடன் கொடுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதி மற்றும் இங்கே எடுத்த நடவடிக்கையின் அடிப்படையில்தான் தள்ளுபடி கொடுக்கப்பட்டுள்ளது. எனவே இந்த வழக்கானது 4–9–2017 அன்று விசாரணைக்கு வருகின்றது. விசாரணைக்குப் பிறகு உச்ச நீதிமன்றம் என்ன தீர்ப்பு வழங்குகின்றதோ அதன் அடிப்படையில் ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன். இது குறித்து இன்னும் விவரமாகச் சொல்ல வேண்டும் என்றால் என்னிடம் நிறைய இருக்கின்றன. அப்படியெல்லாம் வேண்டாம். நான் சுருக்கமாக முடித்துவிடுகின்றேன். நன்றி, வணக்கம்.

5. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) கால்நடை மருத்துவ நிலையங்கள் கட்டுதல், தொடக்க பால் உற்பத்தியாளர் சங்கப் பணியாளர் ஊதிய உயர்வு, நாகப்பட்டினம், ஓரடியம்புலத்தில் புதிய மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைத்தல், புதிய முதுநிலை பட்டப் படிப்புகள் அறிமுகப்படுத்துதல் மற்றும் தேசிய வண்ண மீன் வானவில், பேரங்காடி அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–20

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 6 ஆண்டுகளாக கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து, பல முன்னோடித் திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி வந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின்

சார்பாக கால்நடைப் பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை சார்ந்த கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்:

1. நடப்பாண்டில் 49 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில் 150 கால்நடை மருத்துவ நிலையங்கள், நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் புதிதாகக் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. நடப்பாண்டில், 93.86 இலட்சம் கால்நடைகளுக்கு நோய்த் தொற்றுகளைத் தடுக்கும் வகையில், 18 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் தடுப்பூசிகள் போடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின்கீழ் கோடுவெளியில் உணவு மற்றும் பால் வளத் தொழில்நுட்பக் கல்லூரி இயங்கி வருகிறது. இக்கல்லூரியில் பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதி, உட்கட்டமைப்பு வசதிகளை சர்வதேசத் தரத்திற்கு உயர்த்தும் நோக்குடன் வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் ஆய்வுக் கூடங்கள், 14 கோடி ரூபாய் செலவில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. உற்பத்தியாளர்களிடமிருந்து கூடுதலாகப் பெறப்படும் பாலை கையாள, திண்டுக்கல், சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், விருதுநகர், தருமபுரி மற்றும் திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் குளிர்பதன வசதி, நவீன பாலகம் அமைத்தல், பால் பதப்படுத்தும் இயந்திரங்கள் நிறுவுதல், கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையை மேம்படுத்துதல், தீவனக் கிடங்குகள், நெய் நிரப்பும் இயந்திரங்கள், தரக் கட்டுப்பாடு ஆய்வகம், பால் பை நிரப்பும் இயந்திரங்கள் மற்றும் இதர உபகரணங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள், 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. தமிழகத்தில் கிராம அளவில் சுமார் 12,000 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. கிராம அளவில் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பால் கொள்முதல் செய்யும் பணியுடன், பால் தரப் பரிசோதனை செய்தல், கால்நடைத் தீவனம் வழங்குதல் போன்ற இதர பணிகளில் ஈடுபட்டுவரும்

2017 ஜூலை 14] **[திரு. எடப்பாடி கே. பழனிசாமி]**

சுமார் 20,000 பணியாளர்களுக்கு, அச்சங்கங்களின் பால் உற்பத்தி மற்றும் அவை ஈட்டும் இலாபம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, ஊதியம் நிர்ணயம் செய்யப்படுகிறது. இவர்களது ஊதியத்தை உயர்த்தி வழங்குமாறு வைத்த கோரிக்கையை பரிசீலனை செய்து, அவர்களது பணி மூப்பு அடிப்படையில், அனைத்து முதுநிலை பணியாளர்களுக்கும் பயனளிக்கும் வகையில், மாற்று ஏற்பாடாக பணப்பயன்பெறும் மாற்று திட்டத்தை அரசு பரிசீலித்து வருகிறது. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் 20,000 பணியாளர்கள் உடனடியாக பயன்பெறும் வகையில், அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 200/– ரூபாய் கூடுதலாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான 5 கோடி ரூபாய் செலவினம் சங்க நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

6. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2012 ஆம் ஆண்டில் நாகப்பட்டினத்தில் இந்தியாவிலேயே முதலாவது மீன் வளப் பல்கலைக்கழகத்தை உருவாக்கினார்கள். தற்போது, மீன் வளப் பிரிவில் தேவைப்படும் மனிதவளத் தேவையினைப் பூர்த்தி செய்திடும்வகையில் நடப்பாண்டில், நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், தலைஞாயிறு பேரூராட்சியில் அமைந்துள்ள ஓரடியம்புலம் கிராமத்தில் ஒரு புதிய மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் துவக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத்தின்கீழ் நிறுவப்படும் இந்தப் புதிய மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடப்பாண்டிலிருந்து 20 மாணவர்கள் மீன் வள இளநிலை பட்டப் படிப்பிற்கு சேர்க்கப்படுவார்கள். இந்த மீன் வளக் கல்லூரிக்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் 15 ஏக்கர் பரப்பிலும், 50 ஏக்கர் பரப்பளவில் நன்னீர் மற்றும் உவர்நீர் மீன் பண்ணைகளும் அமைக்கப்படும். இந்த மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தினை அமைப்பதற்கு 28 கோடியே 82 இலட்சம் ரூபாய் முதற்கட்டமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

7. சென்னை, இராயபுரத்தில் ஒரு மீன் வளப் பயிற்சி நிலையமும், மீன் வளர்ப்புத் தொழில்நுட்பங்களில் பல்வேறு பயிற்சிகள் வழங்க காஞ்சிபுரம் மாவட்டம், முட்டுக்காட்டிலுள்ள மீன் வளப் பல்கலைக்கழக வளாகத்தில் பயிற்சி மையமும், 13 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி][*2017 ஜூலை 14*

8. தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத்தின், சென்னையிலுள்ள வாணியஞ்சாவடி முதுகலைப் பட்ட மேற்படிப்பு வளாகத்தில் இந்தியாவிலேயே முதன் முறையாக 'மீன் வள வணிக மேலாண்மை' (MBA in Fisheries Enterprises Management) *முதுகலைப் பட்டப் படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டு, ஆண்டுதோறும் 40 மாணவர்கள் நடப்பாண்டிலிருந்து சேர்க்கப்படுவார்கள். மேலும், மத்திய அரசின் உயிர் தொழில்நுட்பத் துறையின் உதவியுடன், கடல்சார் உயிர் தொழில்நுட்ப* (Marine Biotechnology) *முதுகலைப் பட்டப் படிப்பு தொடங்கப்பட்டு, 12 மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள். இவை தவிர, இந்தியாவிலேயே முதன்முதலாக 'மீன் வள மருந்தியலில்'* (Fisheries Pharmacology) *முதுகலைப் பட்டப் படிப்பும் தொடங்கப்படும். இந்த நிலையத்தில் நவீன நூலகம், அதி நவீன ஆய்வுக் கூடங்கள் மற்றும் ஆராய்ச்சியினை மேற்கொள்ள உயிரணு மரபியல், மூலக்கூறு உயிரியல், மரபு சங்கிலி தொடர் வேதிவினை, நொதியியல், நுண்ணுயிரியல் மற்றும் உயிர்–வேதியியல் ஆய்வகங்கள் உருவாக்கப்படும். இந்த மீன் வள முதுநிலை பட்டப் படிப்புகளுக்கான கூடுதல் கல்விக் கூட வசதிகள் 6 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.* (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–25

9. கன்னியாகுமரி மாவட்டம், மணக்குடி மீனவ கிராமத்தில் பழையாறு ஆறு கடலில் சங்கமிக்கும் இடத்தில் மீன் வளத் துறைக்குச் சொந்தமான 10 ஏக்கர் பரப்பளவு கொண்ட மீன் பண்ணை அமைந்துள்ள பகுதியில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும்விதமாக, நடப்பாண்டில் மீன் வளர்ப்புக் குளம், படகு சவாரி வசதிகள், நடைப்பயிற்சிக்கான நடைபாதை தளம், புல்வெளி, வண்ண மீன் காட்சியகம், குழந்தைகள் விளையாட்டுப் பகுதி மற்றும் உணவக வசதிகளுடன் மணக்குடி சூழியல் பாதுகாப்புப் பூங்கா 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

10. மீன் வளத் துறையால் சேத்துப்பட்டு ஏரியில் அமைக்கப்பட்டிருக்கும் பொழுதுபோக்கு தூண்டில் மீன்பிடிப்பு மற்றும் பசுமைப் பூங்காவிற்கு வரும் பார்வையாளர்களின் தேவைக்காக தற்போது அமைக்கப்பட்டுள்ள பன்னடுக்கு வாகன நிறுத்தம் 9 அடுக்குகள் கட்டுவதற்கு வடிவமைக்கப்பட்டு, 5 அடுக்குகள் மட்டும் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இதனருகில் அமைக்கப்பட்டிருக்கும் கீழ்ப்பாக்கம் மெட்ரோ

2017 ஜூலை 14]**[திரு. எடப்பாடி கே. பழனிசாமி]**

இரயில் நிலையத்தினைப் பயன்படுத்தும் பயணிகளின் வாகன நிறுத்தத் தேவைகளையும் கருத்தில்கொண்டு, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்துடன் இணைந்து, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின்மூலம் விரிவான ஆய்வு மேற்கொண்டு, இரு நிறுவனங்களும் வருவாயினை பகிர்ந்துகொள்ளும் வகையில் கூடுதல் தளங்கள் கட்டப்படும்.

11. வண்ண மீன்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள வணிகர்களை ஒருங்கிணைத்து, சர்வதேச அளவில் வண்ண மீன்கள் வர்த்தகத்தை மேம்படுத்தும்விதமாக, வண்ண மீன்கள் வளர்ப்பு சார்ந்த அனைத்துப் பொருட்களும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில், தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத்தின்மூலம் பொதுமக்கள் மற்றும் தொடர்புடைய வர்த்தகர்களை ஈர்க்கும் பொழுதுபோக்கு வசதிகளுடன்கூடிய தேசிய வண்ண மீன் வானவில் பேரங்காடி சென்னை, மாதவரத்தில் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் மூன்றாம்கட்ட செயல்பாடுகளைச் செயல்படுத்துதல், “அம்மா இ-கிராமம்” அமைத்தல் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் ‘தமிழ்நெட்’ பெயரில் Optical Fibre Network திட்டத்தைச் செயல்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மா அவர்கள் அரசின் சார்பில், தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்ந்த அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுகின்றேன்.*

1. தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு, தேசிய மின்னாளுமைத் திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட மாநில மற்றும் மத்திய அரசுகளின் பகிர்வு திட்டமாகும். இந்த வலையமைப்பு தமிழ்நாடு மின்னணு நிறுவனம்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வலையமைப்பு இரண்டு படிநிலைகளைக் கொண்டு, முதல் நிலையில் மாநிலத் தலைநகரத்துடன் மாவட்டத் தலைநகரங்களும், இரண்டாம் நிலையில் மாவட்டத் தலைநகரங்களுடன் வருவாய்க் கோட்ட அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களும் இணைக்கப்பட்டுள்ளன.